www.tamilarangam.net

# வன்னி வாழ் எமது உறவுகளை மீட்க ஒன்றிணைந்து எழுவோம் வாருங்கள்! 01.02.2009

## யாழ் குடாநாட்டு மக்களே!

**மண்ணையும் மக்களையும் மீட்போம் என்று வெற்று வீரம் பேசிய புலிகள் இயக்கம்** தம்மிடமிருந்த பலத்தைப் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக

**இதுவரை என்ன செய்தார்கள்?..**
**எதைத்தான் சாதித்தார்கள்?..**
**எங்களுக்கு பேரழிவுகளை மட்டுமே இவர்கள் உருவாக்கிவிட்டிருக்கிறார்கள்!**

**நாங்கள் சமாதானத்தை விரும்புகின்றோம்!**
**அமைதியையும் அரசியல் தீர்வையும் விரும்புகின்றோம்!**

தமிழ்பேசும் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக யுத்தத்தைத் தொடங்கிய **புலிகள் இன்று தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக வன்னி வாழ் எமது உறவுகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றார்கள்.** வன்னியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து புலிகள் எமது உறவுகளை சுதந்திரமாக வெளியேறவிடாது தடுத்து வைத்திருக்கின்றார்கள்.

இந்நிலையில், **ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள், வன்னியில் புலிகளின் பிடிக்குள் சிக்குண்டு தவிக்கும் எமது உறவுகளை அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருவதற்கு 48 மணி நேர கால அவகாசத்தைக் கொடுத்திருந்தார்.** புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து **வெளியேறி வருவோருக்கான பாதுகாப்பும், அமைதியும், சுதந்திரமும், உரிமையும் வழங்கப்படும்** எனவும் ஜனாதிபதி அவர்கள் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், **தங்களது சுயலாபம் கருதி இது குறித்து சற்றேனும் சிந்திக்காத புலிகள், எமது உறவுகளின் மத்தியிலிருந்துகொண்டு பாதுகாப்புப் படையினர் மீது தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். இதனால் வன்னியில் வாழும் எமது உறவுகளே பேரவலங்களை சந்திக்கவேண்டிய கொடுமைகள் நடந்துவருகின்றன.** ஜனாதிபதி அவர்கள் கொடுத்திருந்த 48 மணி நேர கால அவகாசத்தைப் பயன்படுத்தி **புலிகள் வன்னி வாழ் எமது உறவுகளை வெளியேறுவதற்கு அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை.** கடந்த காலங்களிலும் புலிகள் இது போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளையே மேற்கொண்டு இருந்தார்கள்.

எமது மக்களுக்கு எந்த வகையிலும் பயன்படாத புலிகளின் இருப்புக்காக வன்னி வாழ் எமது அப்பாவி உறவுகள் பலியாவதை நாம் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. இதனால் அழிவுகள் மட்டும்தான் எஞ்சப் போகின்றன.

**ஆகவே, அழிவுகளிலிருந்து வன்னிவாழ் எமது உறவுகளை மீட்டெடுப்பதற்காக புலிகளின் பலாத்காரப் பிடிக்குள் இருந்து சுதந்திரமாக அவர்கள் வெளியேறி வருவதற்காக,**

**யாழ் குடாநாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரள்வோம்!**
**பேரணியாக எழுவோம்!**
**எமது உணர்வுகளை ஏகக் குரலில் வெளிப்படுத்துவோம்!**

மனச்சாட்சியுடன் இந்த மனிதாபிமானக் கோரிக்கைக்காக யாழ் குடாநாட்டில் **வாழும் அனைத்து மக்களும் அணி திரள்வோம்! எமது உணர்வுகளை உலகத்தின் கண் முன்னால் ஒன்றுபட்டு வெளிப்படுத்துவதன் மூலம் எமது உறவுகளை நாம் காப்போம்!**

**தேச மக்கள் எழுச்சிப் பேரவை - யாழ் மாவட்டம்**